சங்ககிரி தொகுதியில்

இரு சுற்றுகளில் முன்னிலை வகித்த தவெக !

சங்ககிரி, மே 4: சங்ககிரி சட்டப்பேரவைத் தொகுதியில் தவெக வேட்பாளர் மொத்தம் 25 சுற்று வாக்கு எண்ணிக்கையில் இரு சுற்றுகளில் முன்னிலை வகித்தார். இறுதியில் திமுகவை 3ஆவது இடத்திற்கு தள்ளிவிட்டு, 2ஆவது இடத்தை பிடித்தார்.

சங்ககிரி தொகுதியில் தவெக சார்பில் கே.செந்தில்குமார் போட்டியிட்டார். இத்தொகுதியில் மொத்தம் 25 சுற்றுகளில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. முதல் சுற்றிலிருந்தே அதிமுக முன்னிலை வகித்தது. தவெக தொடர்ந்து 2ஆவது இடத்தை பெற்று வந்தது.

இந்நிலையில் 10, 11-ஆவது சுற்றுகளில் அதிமுக வைவிட சற்று தவெக அதிகமான வாக்குகள் பெற்றது. இறுதியில் அதிமுக வெற்றிபெற்றது. தவெக இரண்டாவது இடத்தையும், திமுக மூன்றாவது இடத்தை பிடித்தன.

இத் தொகுதியில் மொத்தம் பதிவான 2,926 தபால் வாக்குகளில் 244 வாக்குகள் செல்லாதவையாக அறிவிக்கப்பட்டன. இதில் 12 வாக்குகள் நோட்டாவுக்கு பதிவாகியிருந்தன.

நாமக்கல் மாவட்டத்தில்

தவெக 5, அதிமுக -1 தொகுதிகளில் வெற்றி

நாமக்கல், ஏப். 4: நாமக்கல் மாவட்டத்தில் தமிழக வெற்றிக் கழகம் ஐந்து தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. அதிமுக 1 தொகுதியில் வெற்றிபெற்றுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பதிவான வாக்குகள் திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியில் திங்கள்கிழமை எண்ணப்பட்டன. காலை 8 மணிக்கு தபால் வாக்குகளும், அதன்பிறகு 8.30 மணியளவில் மின்னணு வாக்கு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்பட்டன.

ராசிபுரம் (தனி) தொகுதியை பொருத்தமட்டில், தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் 14,511 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பாஜக வேட்பாளர் டி. பிரேம்குமார் 60,297 வாக்குகளும், திமுக வேட்பாளர் மா.மதிவேந்தன் 57,884 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் சசிகலா 6,415 வாக்குகளும் பெற்றனர். நோட்டாக்கு 863 வாக்குகள் கிடைத்தன.

சேந்தமங்கலம் (ப.கு) சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் சி.சந்திரசேகரன் 66,160 வாக்குகளும், திமுக வேட்பாளர் பி. பூமலர் 64,637 வாக்குகளும், தவெக வேட்பாளர் பொன்.சந்திரசேகர் 68,815 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் சி.பொன்னுமணி 6,467 வாக்குகளும் (தபால் வாக்குகள் உள்பட) பெற்றனர். அதிமுக வேட்பாளர் சி. சந்திரசேகரனை காட்டிலும், 2,655 வாக்குகள் வித்தியாசத்தில் தவெக வேட்பாளர் பொன்.சந்திரசேகர் வெற்றி பெற்றுள்ளார்.

நாமக்கல் சட்டப்பேரவைத் தொகுதியில், அதிமுக வேட்பாளர் ஸ்ரீதேவி பி.எஸ். மோகன் 68,736 வாக்குகளும், திமுக வேட்பாளர் ப.ராணி 52,808 வாக்குகளும், தவெக வேட்பாளர் சி.எஸ்.திலீப் 79,744 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் க. பிரவீன்குமார் 6,286 வாக்குகளும் பெற்றனர். நோட்டாவுக்கு 760 வாக்குகள் கிடைத்தன. அதிமுக வேட்பாளர் ஸ்ரீதேவி பி.எஸ். மோகனை விட 11,008 வாக்குகள் கூடுதலாக பெற்று தவெக வேட்பாளர் சி.எஸ். திலீப் வெற்றி பெற்றுள்ளார். குமாரபாளையம் தொகுதியில், அதிமுக வேட்பாளர் பி.தங்கமணி 73,483 வாக்குகளும், திமுக வேட்பாளர் செ.பாலு 39,993 வாக்குகளும், தவெக வேட்பாளர் சி.விஜயலட்சுமி 81,179 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் யுவராணி சுரேஷ் 7,663 வாக்குகளும் பெற்றனர். நோட்டாக்கு 665 வாக்குகள் கிடைத்தன. அதிமுக வேட்பாளர் தங்கமணியை காட்டிலும் 7,696 வாக்குகள் கூடுதலாக பெற்று தவெக வேட்பாளர் சி. விஜயலட்சுமி வெற்றி பெற்றுள்ளார்.

திருச்செங்கோடு தொகுதியில், கொமதேக வேட்பாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் 49,313 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் ஆர்.சந்திரசேகர் 51,183 வாக்குகளும், தவெக வேட்பாளர் கே.ஜி.அருண்ராஜ் 79,214 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் கே.ரேவதி 6,064 வாக்குகளும் பெற்றனர். நோட்டாவுக்கு 517 வாக்குகள் கிடைத்தன. அதிமுக வேட்பாளர் சந்திரசேகரரை காட்டிலும் 28,031 வாக்குகள் அதிகம் பெற்று தவெக வேட்பாளர் கே.ஜி.அருண்ராஜ் வெற்றி பெற்றார்.

பரமத்திவேலூரில் அதிமுக வெற்றி: இந்த தொகுதியில் தொடக்கம் முதலே திமுக வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி முன்னிலை வகித்து வந்தார். இறுதியான நான்கு கட்ட சுற்றுகளில் அதிமுக வேட்பாளர் எஸ்.சேகர் முன்னிலை வகித்து வெற்றி பெற்றார்.

குமாரபாளையம் தொகுதியில் வெற்றி பெற்ற தவெக வேட்பாளர் சி. விஜயலட்சுமிக்கு வெற்றிபெற்றதற்கான சான்றிதழை வழங்குகிறார் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கே.குமரன். (வலது) திருச்செங்கோடு தொகுதி தவெக வேட்பாளர் கே.ஜி.அருண்ராஜிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை வழங்குகிறார் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் லெனின்.

முட்டை விலை ரூ.5.40-ஆக நீடிப்பு

நாமக்கல், மே 4: தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், கோழிப் பண்ணையாளர்களிடம் முட்டை விலை நிர்ணயத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக கருத்து கேட்கப்பட்டது. மற்ற மண்டலங்களில் விலையில் மாற்றம் இல்லாத நிலையில், இங்கும் விலையில் தற்போதைக்கு மாற்றம் ஏதும் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை மாற்றமின்றி ரூ.5.40-ஆக தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது.

பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கறிக்கோழி கிலோ ரூ.112-ஆகவும், முட்டைக் கோழி கிலோ ரூ. 110-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 4 மையங்களிலும் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை

சேலம் கருப்பூர் அரசுப் பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் செல்லும் அலுவலர். (வலது) சேலம் கருப்பூர் அரசுப் பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையம் முன் திங்கள்கிழமை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மத்திய பாதுகாப்புப் படையினர்.

சேலம், மே 4: சேலம் மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் 4 இடங்களில் திங்கள்கிழமை எண்ணப்பட்டன. இங்கு 1,500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அந்தந்த தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு இருப்பு அறையில் வைத்து, மூன்று அடுக்கு பாதுகாப்புப் போடப்பட்டு கண்காணிக்கப்பட்டது. மேலும், சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, வேட்பாளர்களின் முகவர்கள் 24 மணிநேரமும் பார்வையிடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஓமலூர், மேட்டூர், சேலம் மேற்கு மற்றும் சேலம் வடக்கு ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையம் ஓமலூரில் உள்ள கருப்பூர் அரசுப் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த 4 இடங்களிலும், ஏற்காடு (எஸ்.டி), சேலம் தெற்கு மற்றும் வீரபாண்டி ஆகிய 3 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்குகள் அம்மாப்பேட்டையில் உள்ள ஸ்ரீ கணேஷ் கலை, அறிவியல் கல்லூரியிலும், கெங்கவல்லி (தனி), ஆத்தூர் (தனி) ஆகிய 2 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் தலைவாசலில் உள்ள ஸ்ரீ மாருதி மற்றும் மாருதி கல்வி நிறுவன வளாகத்தில் 2 இடங்களிலும், எடப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய தொகுதிகளுக்கான வாக்குகள் சங்ககிரியில் உள்ள விவேகானந்தா கல்வி நிறுவன வளாகத்திலும் எண்ணப்பட்டன.

வாக்கு எண்ணும் பணி காலை 8 மணிக்கு தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. தொடர்ந்து, வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன.

வாக்கு எண்ணிக்கையையொட்டி, அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில், பாதுகாப்புப் பணியில் 1,500க்கும் மேற்பட்ட போலீஸார் 4 மையங்களிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். முகவர்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

வாக்கு எண்ணும் பணியில் 594 பணியாளர்கள்: ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 14 மேஜைகள் வீதம் மொத்தம் 154 மேஜைகளில் வாக்கு எண்ணும் பணி நடைபெற்றது. ஒரு மேஜைக்கு மேற்பார்வையாளர், உதவியாளர், நுண்பார்வையாளர் என மொத்தம் 3 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். மொத்தம் உள்ள 154 மேஜைகளுக்கும் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் மேஜைக்கும் சேர்த்து மொத்தம் 165 மேஜைகளுக்கு 198 மேற்பார்வையாளர்கள், 198 உதவியாளர்கள், 198 நுண்பார்வையாளர்கள் என மொத்தம் 594 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

வேட்பாளர்களின் முகவர்கள் கியூ ஆர் கோடுடன் கூடிய அனுமதி அட்டை வைத்திருந்தவர்கள் மட்டுமே மையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். மையங்களின் முகப்பில் கைப்பேசியை பாதுகாப்பாக வைப்பதற்கு தனி அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள், பணியாளர்கள் செல்வதற்கு தனிவழி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சேலம் கருப்பூர் வாக்கு எண்ணும் மையத்தில் காவல் உதவி ஆய்வாளர் திடீர் மயக்கம்

சேலம், மே 4: சேலம் கருப்பூர் வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திடீரென மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் கருப்பூரில் உள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் சேலம் வடக்கு, சேலம் மேற்கு, ஓமலூர் மற்றும் மேட்டூர் தொகுதியில் பதிவான வாக்குகள் திங்கள்கிழமை எண்ணப்பட்டன.

இதையொட்டி வாக்கு எண்ணும் மைய நுழைவாயில் முன் ஏராளமான போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது நண்பகல் 12 மணியளவில் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த சூரமங்கலம் உதவி ஆய்வாளர் செல்வரத்தினம் (50) திடீரென மயக்கம் அடைந்து கீழே விழுந்தார்.

இதைக் கவனித்த சக போலீஸார் அவரை மீட்டு உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே காவல் உதவி ஆய்வாளர் செல்வரத்தினத்துக்கு வலிப்பு உள்ளிட்ட நோய் இருந்ததாகவும், இதனால் அவர் திடீரென மயங்கி விழுந்ததாகவும் போலீஸார் தெரிவித்தனர்.

பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்.
பிளாட் எண். 1-C, முதல் தளம், H.M.H. பிளாசா, புதிய எண். 56 (K) 105, G.N.செட்டி சாலை, T.நகர், சென்னை-600017, தமிழ்நாடு. இந்தியா.
மின்னஞ்சல்: sys@pegasus-arc.com, இணைய முகவரி: www.pegasus-arc.com

கேட்பு அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் பின்வரும் அறிவிப்பினை இதன் மூலம் வழங்குகிறோம். பின்வரும் நபர்களாகிய நீங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி கடன் வசதி பெற்றுள்ளீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். பெற்ற கடனுக்கு ஈடாக கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமை ஆவணங்களை பெகாசஸ் 2024 டிரஸ்ட் 3-இன் அறங்காவலராக செயல்படும் பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (இனிமேல் PARPL என குறிப்பிடப்படும்)-யிடம் வழங்கி அடமானமும் வைத்துள்ளீர்கள். கடன் வசதிகளை பெற்ற பிறகு ஒப்பந்த விதிகளின் கடைப்பிடிக்காமல் அவற்றுக்கு மாறாக பெற்ற கடன் மற்றும் வட்டி, இதர செலவுகளை முறையாக திருப்பி செலுத்த தவறிவிட்டீர்கள், அதன் காரணமாக உங்கள் கடன் கணக்கு வாராக்கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் உங்கள் கடன் கணக்கில் உள்ள பாக்கி மற்றும் வட்டி இதர செலவுகளை சேர்த்து (கீழே விவரிக்கப்பட்டுள்ள) மொத்தமாக செலுத்துமாறு இதன் மூலம் மீண்டும் நிதி நிறுவனம் வலியுறுத்துகிறம். நிதி நிறுவனத்திற்கு சேர வேண்டிய கடன் பாக்கியை நீங்கள் தவறினால் SARFAESI சட்டம் பிரிவு 13(4) கீழ் விவரிக்கப்பட்டுள்ள அனைத்து அல்லது ஏதேனும் ஒரு உரிமையை நிதி நிறுவனம் செயல்படுத்தும், மேலும் பொருந்துகின்ற சட்ட சரத்துகள் படியும் அவசியம் என நிதி நிறுவனம் கருதும் பட்சத்தில் மேற்குறித்த நடவடிக்கைகளையோ அல்லது சட்டப்படியான மேல் நடவடிக்கைகளையோ எடுப்பதற்கு வங்கியின் உரிமைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு செய்யப்படுகிறது.

கிளை: கிருஷ்ணகிரி, கடன்தாரர்: திரு. புவழந்தி. R, இணை கடன்தாரர்-1 சிவகாமி R, இருவரும் வசிப்பது: கதவு எண் 5/291, மேலச்சிப்பட்டி, மணியதஹள்ளி, சேலம், தமிழ்நாடு – 636807. சொத்து முகவரி: R S. எண் 376/2B, பட்டா எண் 295, மணியதஹள்ளி கிராமம், நள்ளம்பள்ளி தாலுகா, தர்மபுரி மாவட்டம், சேலம், தமிழ்நாடு – 636807. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005061984, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ. 13,97,536.51/-, அன்றுள்ளபடி: 24.12.2025.

சொத்து விவரம்: தர்மபுரி பதிவு மாவட்டம், நள்ளம்பள்ளி தாலுகா, தர்மபுரி மேற்கு SRO, மணியதஹள்ளி கிராமத்தில், சர்வே எண் 376/2B Dry Hec.0.86.0 or Ac.2.12 cents Asst. Rs.1,19 NP, இதில் 0.09.72 ஹெக்டேர் (அல்லது 0.24 ஏக்கர்) பரப்பளவு கொண்ட பகுதி, சர்வே எண் 376/2B1 உட்ப்பிரிவில் அமைந்துள்ளதுடன், அதில் RCC வீட்டு கட்டிடம் அமைந்துள்ளது. இந்நிலத்தின் எல்லைகள் : வடக்கு: அதே சர்வே எண்ணில் சிவலிங்கம் அவர்களின் மீதமுள்ள நிலம், தெற்கு: அதே சர்வே எண்ணில் கிருபாளந்தம் அவர்களின் மீதமுள்ள நிலம், கிழக்கு: 30 லிங்க்ஸ் அகல பொதுச் சாலை, மேற்கு: அதே சர்வே எண்ணில் மீதமுள்ள நிலம். மேற்கண்ட நிலம் தர்மபுரி மேற்கு SRO மற்றும் தர்மபுரி பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

கிளை: தர்மபுரி, கடன்தாரர்: திரு. M. ஜெகநாதன் S/o முருகன், இணை கடன்தாரர்-1 திருமதி. A. சுபத்திரா D/o முருகன், இணை கடன்தாரர்-2 திரு. முருகன் கிருஷ்ணன் S/o: கிருஷ்ணன், அனைவரும் வசிப்பது: 82/31A, நூரசன் குளம், கோவில் அருகில், தர்மபுரி, தமிழ்நாடு – 636701. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005022249, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகைரூ. 16,58,154.18/-, அன்றுள்ளபடி: 24.12.2025.

சொத்து விவரம்: ஆவணம் எண்: 3815/2012 இன் படி, பழைய சர்வே எண் 257/1A1A உட்ப்பிரிவுக்குப் பின் புதிய T.S. No. 213, வார்டு-C, பிளாக்-19. வருவாய் பதிவின்படி, T.S. No. 213/1, வார்டு-C, பிளாக்-19, மொத்த பரப்பளவு 357 சதுர அடி. கதவு எண் 82/31-A. வெள்ளகவுண்டன்பாளையம் கிராமம், தர்மபுரி தாலுக்கா, தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி மேற்கு SRO அமைந்துள்ளது. 357 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள்: வடக்கு: சரஸ்வதி, அருணாசலம், செந்தில்குமரன் ஆகியோரின் பொதுப் பாதை. தெற்கு: சரஸ்வதி மற்றும் பித்து அவர்களின் மீதமுள்ள நிலம், கிழக்கு: மலர் வீடு, மேற்கு: ராஜா வீடு.

கிளை: தர்மபுரி, கடன்தாரர்: திரு. M ரமேஷ் S/o மாணிக்கம், இணை கடன்தாரர்-1 திருமதி. ரூபிகா ரமேஷ் S/o மாணிக்கம், இணை கடன்தாரர்-2 திரு. மாணிக்கம் முத்துகௌண்டர் S/o முத்துகௌண்டர், இணை கடன்தாரர்-3 திருமதி. மங்கம்மாள் மாணிக்கம் W/o மாணிக்கம், அனைவரும் வசிப்பது: கதவு எண் 8/282A, பாரிகம் கட்டு வளவு, பாரிகம் ஈசல்பட்டி, மலைத்தஹள்ளி, கோவில் அருகில், தர்மபுரி, சேலம், தமிழ்நாடு – 636807. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005025521, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ. 14,94,609.64/-, அன்றுள்ளபடி: 24.12.2025

சொத்து விவரம்: ஆவணம் எண்: 2365/2023 இன் படி, சர்வே எண்கள் 1142/2, 1141/6 ஆகும். வருவாய் பதிவுகளின்படி இதுவும் சர்வே எண்கள் 1142/2, 1141/6, மொத்த பரப்பளவு 0.23 ½ ஏக்கர், கதவு எண் 8/282A (சொத்து வரி பதிவின்படி). மணியத்தஹள்ளி கிராமம், நள்ளம்பள்ளி தாலுக்கா, தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி மேற்கு SRO. 0.23 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள்: வடக்கு: சின்னபுள்ளி நிலம், தெற்கு: ரமேஷ் மாணிக்கம் மற்றும் பிறர் நிலம், கிழக்கு: ரமேஷ் மாணிக்கம் மற்றும் பிறர் நிலம், மேற்கு: ரமேஷ் மாணிக்கம் மற்றும் பிறர் நிலம். மேலும், இச்சொத்துடன் தொடர்புடைய சகல பாத்தியம் மற்றும் பாதை உரிமையுடன்.

கிளை: தர்மபுரி, கடன்தாரர்: திருமதி. E. நீலாவதி, இணை கடன்தாரர்:-1 திரு. V. வெங்கடேசன், இணை கடன்தாரர்-2 திரு. வீரமணி V, அனைவரும் வசிப்பது: காவேரி மெயின் ரோடு, பென்னாகரம், கோவில் அருகில், தர்மபுரி, தமிழ்நாடு – 636810. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005047433, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ.14,15,090.01/, அன்றுள்ளபடி 24.12.2025.

சொத்து விவரம்: ஆவணம் எண்: 654/2023 இன் படி, சர்வே எண் 558/4 ஆகும். வருவாய் பதிவுகளின்படியும் சர்வே எண் 558/4 ஆகும். மொத்த பரப்பளவு 0.20 ஏக்கர், கதவு எண் 40D (சொத்து வரி பதிவின்படி). பாப்பாரப்பட்டி கிராமம், பென்னாகரம் தாலுக்கா, தர்மபுரி பதிவு மாவட்டம், பாலக்கோடு SRO. (VAO எல்லைச் சான்றிதழின் படி, 0.20 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் எல்லைகள் : வடக்கு: முத்து, கூக்கன் @ காளி நிலம், தெற்கு: கோவிந்தசாமி நிலம், கிழக்கு: கிருஷ்ணன் நிலம், மேற்கு: செல்ராயன் நிலம். மேலும், இச்சொத்துடன் தொடர்புடைய சகல பாத்தியம் மற்றும் பாதை உரிமையுடன்.

கிளை: ஓசூர், கடன்தாரர்: திரு. தேவராஜ் M, இணை கடன்தாரர்-1 திருமதி. சாந்தி K, இருவரும் வசிப்பது: கதவு எண் 23, தொட்டிகொல்லப்பள்ளி, பர்கூர், பண்டசீனூர், பாசிநாயனப்பள்ளி, தர்மபுரி, தமிழ்நாடு – 635104. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005056891, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ. 14,96,229.38/-, அன்றுள்ளபடி 24.12.2025

சொத்து விவரம்: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், பர்கூர் தாலுக்கா, பர்கூர் SRO , பாசிநாயனப்பள்ளி W கிராமம், சர்வே எண் 33/5A, மொத்த பரப்பளவு 0.34.0, புதிய உட்ப்பிரிவு சர்வே எண் 33/5A4C, பரப்பளவு 0.04.30, முழுவதும் காலி நிலம். எல்லைகள் : கிழக்கு: சின்னசாமி நிலம், அன்பு நிலம் மற்றும் சிமெண்டு சாலை, மேற்கு: மாதையன், மாதம்மாள் நிலம், வடக்கு: மாதையன், மாதம்மாள் நிலம், தெற்கு: சாலம்மாள் நிலம், ரமேஷ் நிலம். மேற்கண்ட எல்லைகளுக்குள், மொத்தம் 0.10½ சென்ட் பரப்பளவு கொண்ட நிலம், பொதுப் பாதை மற்றும் சகல பாத்தியம் மற்றும் பாதை உரிமையுடன். இச்சொத்து பாசிநாயனப்பள்ளி கிராம பஞ்சாயத்து, பர்கூர் ஒன்றிய கவுன்சில் வரம்பிற்குள், மேலும் பர்கூர் SRO மற்றும் கிருஷ்ணகிரி பதிவு மாவட்ட வரம்பிற்குள் அமைந்துள்ளது.

கிளை: திருப்பத்தூர், கடன்தாரர்: திரு. சக்தி S, வசிப்பது: எண். 875, இந்திரா நகர், காலனி, பண்ணந்தூர் அஞ்சல், போச்சம்பள்ளி, அம்மன் கோவில் அருகில், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு – 635123. இணை கடன்தாரர்:-1 திரு. சண்முகம் கலியப்பன், வசிப்பது: 3/0, காக்கச்சான் LO. 375, இந்திரா நகர், காலனி, பண்ணந்தூர் அஞ்சல், போச்சம்பள்ளி, பண்ணந்தூர், அம்மன் கோவில் அருகில், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு – 635123. இணை கடன்தாரர்-2 திருமதி. தனம், வசிப்பது: LIC, சண்முகம் நகர், காலனி, போச்சம்பள்ளி, பண்ணந்தூர் அஞ்சல், பண்ணந்தூர், இந்திரா நகர் 5-875, அம்மன் கோவில் அருகில், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு – 635123. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005056891, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ.11,60,322.03/-, அன்றுள்ளபடி 24.12.2025

சொத்து விவரம்: தர்மபுரி மாவட்டம், பர்கூர் SRO, போச்சம்பள்ளி தாலுக்கா, பண்ணந்தூர் கிராமம் சர்வே எண் 376/1V, காலி நிலப்பகுதியில் RCC. வீட்டு கட்டிடம். எல்லைகள்: வடக்கு: திரு. ராமசாமி சொத்து, தெற்கு: திரு. சண்முகம் நிலம், கிழக்கு: 8 அடி மண் சாலை மற்றும் திரு. குப்பன், மேற்கு: (குறிப்பிடப்படவில்லை). மொத்த பரப்பளவு 0.15 சென்ட் அல்லது 654 சதுர அடி கொண்ட இச்சொத்தில் RCC. வீட்டு கட்டிடம் அமைந்துள்ளது.

கிளை: கிருஷ்ணகிரி, கடன்தாரர்: திரு. அருண்குமார், இணை கடன்தாரர்-1 திருமதி. ராஜம்மாள் இருவரும் வசிப்பது: எண். 84, அம்பேதகர் நகர், குரும்பேரி, திருப்பத்தூர், நீர்த்தொட்டி அருகில், வேலூர், தமிழ்நாடு – 635652. சொத்து முகவரி: குரும்பேரி, வேலூர், தமிழ்நாடு – 635652. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005083068, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ.13,89,450.27/-, அன்றுள்ளபடி 24.12.2025

சொத்து விவரம்: திருப்பத்தூர் பதிவு மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா மற்றும் திருப்பத்தூர் இணை-II SRO, குரும்பேரி கிராமம் சர்வே எண்கள் 107/1A2C மற்றும் 114/1B ஆகியவை வீட்டு மனைப்பகுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. அவற்றில், உட்ப்பிரிவு சர்வே எண் 107/1A2C மற்றும் 114/1B2 இல் 1695 ¼ சதுர அடி பரப்பளவு கொண்ட வீட்டு மனை மற்றும் அதில் RCC வீடு கட்டப்பட்டுள்ளது. எல்லைகள்: வடக்கு: பொதுச் சாலை, தெற்கு: வீடுகள், கிழக்கு: பொதுச் சாலை, மேற்கு: வெள்ளையா கவுண்டர் வீடு. மேலும், இச்சொத்து திருப்பத்தூர் SRO மற்றும் கிருஷ்ணகிரி பதிவு மாவட்ட வரம்பிற்குள் அமைந்துள்ளது.

கிளை: ஓசூர், கடன்தாரர்: திரு. முனிராஜு VK, இணை கடன்தாரர்-1 திருமதி. கௌரம்மா, இருவரும் வசிப்பது: கேசரகெரே, மஸ்தி, கோலார், கர்நாடகா – 563139. கடன் கணக்கு எண் MFLTAMSECUL000005097389, NPA தேதி 30.09.2025, கேட்பு அறிவிப்பு தேதி 20.01.2026, நிலுவை தொகை ரூ. 22,63,401.56/-, அன்றுள்ளபடி 24.12.2025.

சொத்து விவரம்: 14-08-2023 தேதி விடுவிப்பு ஆவணத்தின் (Release Deed) படி, ஐஞ்சரு எண் 1/A, சொத்து எண் 1/A, MR No.13, V.P Khata No. 1/A-2, சொத்து ID No 151900802800200015, கிழக்கு: மேற்கு 12 அடி மற்றும் வடக்கு: தெற்கு 58 அடி அளவில் பரப்பளவு கொண்டதாகும். இச்சொத்து கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம், மாலூர் தாலுக்கா, மஸ்தி ஹோப்ளி, கேசரகெரே கிராமத்தில் அமைந்துள்ளது (இனிமேல் குறிப்பிடப்பட்ட சொத்து" என்று குறிப்பிடப்படும்). எல்லைகள்: வடக்கு: K.M வெங்கட்ஸ்வாமி வீடு, தெற்கு: அப்பையா சொத்து, கிழக்கு: சாலை, மேற்கு: ராமஞ்சினப்பா வீடு.

மேற்கூறிய கடன்தாரர்கள் பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்-க்கு பணம் செலுத்தத் தவறியதால், பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்கண்ட கடனீட்டு சொத்துகளுக்கு எதிராக, செலவுகள் மற்றும் விளைவுகள் குறித்து முற்றிலும் கடன் வாங்கியவர்களின் பொறுப்பே ஆகும். கடன்தாரர்கள் பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்-ன் எழுதுபூர்வமான அனுமதியின்றி மேற்படி சட்டம் பிரிவு 13 (3)-ன் படி மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்களை விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறுவிதியில் மாற்றம் செய்தாலோ சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள். எந்தவொரு நபரும் அந்த சட்டத்தின் விதிகள் அல்லது அங்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கு முரணான ஊக்கமளிக்கும் நபர்கள். சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளபடி சிறை தண்டனை மற்றும்/அல்லது அபராத விதிக்கப்படுவார்கள்.

தேதி: 05.05.2026
இடம்: தர்மபுரி/